1970 மார்ச் 6]

பனைவெல்லம் அதிகமாகச் செய்கிறார்கள். அதேபோல் கோவை மாவட்டத்திலே தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, அதனால் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க உத்தேசம் உண்டா? அவர்களுக்கும் கொடுக்க வேண்டாமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பனை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கும், தென்னைமரத்திலிருந்து 'நீரா' இறக்கும் தொழிலாளர்களுக்கும் இதிலே உரிமை உண்டு.

முகையூர் ஊராட்சி வழியாக பண்ணப்பட்டிக்கு சாலை அமைத்தல்

* 244 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம், புத்தூர் மணல்மேடு ரோட்டிலிருந்து பண்ணப்பட்டுக்கு, முகையூர் பஞ்சாயத்து வழியாக ரோடு அமைப்பதற்கும், பாலங்கள் கட்டுவதற்குமான கோரிக்கை கிராப்பாளையம் யூனியனிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, பண்ணப்பட்டு, முகையூர் போகின்ற மக்கள் அந்த வழியாகத்தான் போக வேண்டியிருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதனால் மீண்டும் இதனைப் பரிசீலித்து, இத்திட்டத்தை மறுபடியும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இதைப் பரிசீலிக்க வேண்டியது அந்த ஊராட்சி ஒன்றியத்தின் வேலையாகும். அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட முறையீடுகள் எதுவும் வந்திருக்கிறதா என்ற கேள்விக்கு இல்லை என்று பதில் அளித்திருக்கிறோம். அதற்கு அமைக்கப்படவேண்டிய சாலை அமைப்புக்காக நிலம் கையகப்படுத்த 3,000 ரூபாய் ஆகும் என்றும், அதிலே 3 பாலங்களைக் கட்ட 25,000 ரூபாய் செலவாகும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிச் சாலைபோட கிராமப்பணிகள் திட்டத்தின்கீழ் இரண்டாம் நிலையாக மேற்படி பணியை மேற்கொள்ள வேண்டுமென்றும், தலைமைப்பொறியாளர் தெரிவித்துள்ளார். ஆகவே, ஊராட்சி ஒன்றியம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.